**ஜாஎல பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 யூன் 26 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 21 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஜாஎல பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன் கொடுத்தோர் மீதியில் ஏனைய நிதியேற்பாடாகிய ரூபா 1,299,308 இருமுறை குறித்துக் கொள்ளப்பட்டதால் கடன் கொடுத்தோர் மீதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கல் செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் 01 மூலம் திருத்தப்பட்டுள்ளது. |
| (ii) | 2018 டிசம்பர் 31 ஆந் திகதிய பொதுக்களஞ்சிய பேரேட்டு மீதி ரூபா 54,887,125 ஆகும். நேரடிப் பரிசோதனை மீதி ரூபா 6,692,484 ஆகும். வித்தியாசமான ரூபா 48,194,641 சீராக்கல் செய்யப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் நேரடிப் பரிசோதனை மீதியைக் காட்டி பேரேட்டுக் கணக்குடன் இணக்கம் செய்ய வேண்டும். | கணக்கீட்டு மதியுரையாளரின் மதியுரைப்படி கணக்கீட்டு மீதி திருத்தப்படும். |
| (iii) | நன்கொடையாகப் பெறப்பட்ட ரூபா 113,062, ஆயுர்வேத | தேவையான சீராக்கல் | 2019 இறுதிக் கணக்குகளில் நாட்டுகுறிப்பு 02 மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | மருந்துக் கையிருப்பு தவறுதலாக நன்கொடைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | செய்யப்பட வேண்டும். | திருத்தப்பட்டுள்ளது. |
| (iv) | களஞ்சியக் கடன்கொடுத்தோரின் கீழ் குறிப்பிடப்படவேண்டிய ரூபா 975,000.00 செலவாகக் காட்டப்பட்டமையால் பொதுக்களஞ்சியக் கணக்கில் வரவு வைத்ததால் பொதுக் களஞ்சியம் கணக்கு அதிகரித்தும் களஞ்சியக் கடன் கொடுத்தோர் கணக்கு குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | பொதுக் களஞ்சிய கணக்கும் கடன் கொடுத்தோர் கணக்கும் சீராக்கல் செய்யப்பட வேண்டும். | 2019 இறுதிக் கணக்குகளில் நாட்குறிப்பு 03 மூலம் திருத்தப்பட்டுள்ளது. |
| (v) | மீளாய்வாண்டில் பெறப்பட்ட முத்திரை வருவாயில் கொள்வனவு செய்யப்பட்ட 2 டிறக்டர் டிறயிலர்கள் மற்றும் 3 கம்பெக்டர் வாகனங்கள் என்பவற்றிற்குக் கழிக்கப்பட்ட ரூபா 11,223,750 மூலதனமாக்கப்படவில்லை. | நடைமுறை அல்லாத சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | 2019 இறுதிக் கணக்குத் தயாரிப்பின் போது 4 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் திருத்தப்பட்டுள்ளது. |
| (vi) | 2018 ஆம் ஆண்டில் மீளப் பெறப்பட்ட நிலையான வைப்புக்குரிய வட்டி கணக்கிடப்பட்டிருந்தும் மீண்டும் ரூபா 29,662,972 பெறப்பட்ட வட்டியாகச் செலவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் பெறப்பட்டு நிலையான வைப்பு வட்டி ரூபா 482,268 கூடுதலாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது. | நிலையான வைப்பு வட்டி சரிவரக் கணக்கிலிடப்பட வேண்டும். | 2019 இறுதிக் கணக்குத் தயாரிப்பின் போது 06 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் திருத்தப்பட்டுள்ளது. |
| (vii) | மீளாய்வாண்டின் மே, யூன், டிசம்பர் மாத பெறவேண்டிய சம்பள மீளளிப்புக்கான ரூபா 2,160,000 பெற வேண்டிய வருவாயாகக் கணக்கிலிடப்படவில்லை. | குறித்த மாதத்தின் சம்பள மீளளிப்பு பெற வேண்டியதாகக் காட்டப்பட வேண்டும். | 2019 இறுதிக் கணக்குத் தயாரிப்பின் போது 08 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் திருத்தப்பட்டுள்ளது. |
| (viii) | பட்டுவத்தை உப அலுவலகத்திற்குரிய விநோதவரி நிலையான ரூபா 61,000 | ஆண்டிற்கான வருவாயும், செலவினமும் நிதி மற்றும் | 2019 இறுதிக் கணக்குத் தயாரிப்பின் போது 09 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் திருத்தப்படும். |

| | |
|---|---|
| கணக்கிலிடப்படவில்லை. | செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

**(ஆ) கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்கீட்டு விடயங்கள் 08 க்குரிய மீதிகளுக்கும் உப பதிவேட்டு / பட்டோலை மீதிகளுக்குமிடையே ரூபா 162,234,730 வேறுபாடு நிலவியது. | மீதி இணக்கம் செய்யப்பட்டுக் கணக்கு திருத்தப்பட வேண்டும். | சரிவரக் கணக்கிலிடப்பட வேண்டும். |

**(இ) தொங்கற் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2000 முதல் தொடர்ந்து வரும் தீர்வு செய்யப்படாத தீர்வு செய்யப்படாத கணக்கு மீதி ரூபா 236,425 ஆகும். | முன்னைய மீதி தீர்வு செய்யப்பட வேண்டும். | இக்கணக்கு மீதிகள் 06 க்குரிய பிரச்சினை மாதங்களுக்குள் தீர்வு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட வாறுள்ளது. |

**(ஈ) கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நானாவித வைப்புக் கணக்கில் இனங்காணப்படாத 10 ஆண்டுகளைக் கடந்த ரூபா 106,040,584 வைப்பு மீதியும், அநேக ஆண்டுகளாக உள்ள 13 கணக்கீட்டு மீதியானது ரூபா 14,621,496 தொகையும் தீர்வு செய்யப்படாதிருந்தன. | இனங் காணப்பட்டுத் தீர்வு செய்யப்பட வேண்டும். | இக்கணக்கீட்டு மீதிகளைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட வாறுள்ளது. |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| 2018 யூன் 30 ஆந் திகதிய LGD/03/2018 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளர் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி | 97,160 | வீதி அபிவிருத்தியின் போது 03 செயற்திட்டங்களது கொங்கிறீட் கலவையின் தாங்கும் சக்தியும் கனபரிமானமும் பரிசீலிக்கப்பட்டு மதிப்பீட்டில் உள்ளாக்கப்பட்ட போதும், பரிசீலனை எதுவுமில்லாது குறித்த சங்கத்திற்கு ரூபா 97,160 வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடக்க வேண்டும். | சுற்றறிக்கை பெறப்பட்டதன் பின்னர் சகல மதிப்பீட்டிலும் தாங்கும் சக்தியும் கனபரிமாணமும் உள்ளாக்கப்பட்டமை இதற்கு 03 அரச நிறுவனங்கள் உள்ளன. அதனால், தாமதம் ஏற்படுகின்றது. கனபரிமானம் தொடர்பாக வேலை அத்தியட்சகர் பரிந்துரை செய்தால் CORE CUT வெட்டுவதற்கு ஒப்பந்தக்காரருக்குக் கொடுப்பனவு செய்யப்படலாம். |

## 1.5 போதிய அதிகாரத்துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கந்தானை உப அலுவலகத்திற்குரிய தொழில் மற்றும் வியாபர வரி ரூபா 104,850, வியாபார அனுமதிப்பத்திரமாக ரூபா 96,800, சபைக்குச் சொந்தமல்லாத இறைச்சிக் கடையின் ரூபா 686,136 என சொந்தமாக ரூபா 887,786 முறையான அங்கீகாரமல்லாது பழைய நிலுவைக் கடன் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டிருந்தன. | விடயத்திற்கும் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | அம்மீதிகளைப் பதிவழிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 183,525,635 ஆகும்.

இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 75,969,197 ஆகும்.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 45,660 | 51,061 | 50,137 | 25,481 | 44,645 | 52.239 | 51,739 | 25,289 |
| (ii) | வாடகை | 16,702 | 14,422 | 11,397 | 10,968 | 14,439 | 17,519 | 17,424 | 8,965 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,755 | 2,067 | 2,067 | 93 | 2,794 | 2,423 | 3,751 | 93 |
| (iv) | ஏனைய வருமானம் | 129,561 | 250,065 | 229,860 | 889 | 135,652 | 80,365 | 70,914 | 916 |

### 2.2.2 தீர்வையும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ராகமை உப அலுவலகம் மற்றும் பட்டுவத்தை உப அலுவலகங்களில் 2018 சனவரி 01 இல் உள்ளவாறு முறையே ரூபா 7,807,908 மற்றும் ரூபா 5,012,518 நிலுவைகள் இருந்தன. மீளாய்வாண்டின் அறவீடுகள் ரூபா 2,760,480 மற்றும் ரூபா 1,609,055 என்பனவாகும். அறவிடு நலிவடைந்திருந்தது. | தீர்வை நிலுவை அறவிடப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் அறவீட்டின் போது பட்டுவத்தை மற்றும் ராகமை தீர்வை அறவீட்டிற்கு காலக்கெடுவுடனான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. பட்டுவத்த உப அலுவலக நிலுவை துரிதமாக அறவிடப்படும். |
| (ஆ) | சனவரி 01 இல் உள்ளவாறான தீர்வை வரி நிலுவை ரூபா 25,289,000 ஆகும். மீளாய்வாண்டு இறுதியில் அது ரூபா 25,481.000 ஆக அதிகரித்துள்ளது. | தீர்வை நிலுவையை அறவிட விதிமுறைகள் தயாரிக்கப்பட வேண்டும். | ராகமை, பட்டுவத்தை உப அலுவலகங்களின் தீர்வை நிலுவை அறவீடு நலிவாக உள்ளது. |

### 2.2.3 கடை வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 01 இல் உள்ளவாறான வாடகை நிலுவை வருவாய் ரூபா 8,965,000 ஆகும். இதில் எதுவுமே அறவிடப்படவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் அது ரூபா 10,968,000 வரை அதிகரித்துள்ளது. | வருமான நிலுவை அறவிடப்பட வேண்டும். | ஆண்டின் இறுதியில் நிலுவை எதுவுமே அறவிடப்படவில்லை. உள்ளூராட்சி ஆணையாளரிடம் பதிவழிப்பதற்கான அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. |
| (ஆ) | கந்தானை பொதுச் சந்தையின் 02 ஆம் இலக்க இறைச்சிக் கடையிலிருந்து கடந்த 05 ஆண்டுகளாக வருவாயை பெறுவது தவறியிருந்தது. 01 ஆம் 03 ஆம் இலக்க இறைச்சிக்கடைகள் 02 இன் மாதாந்த வாடகையும் தண்டப்பணமாக 2019 சனவரி 29 ஆந் திகதி பெறப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 269,402 ஆகும். | சபையின் சொத்துக்கள் மூலம் வருவாய் பெறப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் மதிப்பீட்டுப் பெறுமதி பெறப்பட்டுக் கேள்விகள் கோரப்படும். விலைமதிப்புத் திணைக்களம் இது வரை மதிப்பீடு செய்யவில்லை. |
| (இ) | பிரதேச சபைக்குரிய ராகமை சந்தையில் உள்ள 03 இறைச்சிக்கடைகளின் முன்னைய ஆண்டுக் குத்தகை வாடகையான ரூபா 1,041,932 மற்றும் தண்டப்ணம் பணமாகிய ரூபா 207,986, மீளாய்வாண்டின் குத்தகை வாடகையான ரூபா 2,192,299 மற்றும் தண்டப்பணம் ரூபா 438,458 என்பன 2019 சனவரி 28 ஆந் திகதி அறவிடப்பட வேண்டியிருந்தது. 2019 ஆம் ஆண்டிலும் அவர்களுக்கே குத்தகையை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீட்டின் படி கேள்விகள் கோரப்பட வேண்டும். | 2018 ஒக்டோபர் 19 ஆந் திகதிய மதியுரைத் தொழிற்படு குழுவானது 2018 ஆம் ஆண்டிற்கான கடை வாடகையை புதிய மதிப்பீட்டின்படி பெறுமாறு கோரியுள்ளது. |
| (ஈ) | ராகமை வாரச் சந்தைக்கு 2018 சனவரி 1 தொடக்கம் டிசம்பர் 31 வரை ரூபா 3.160,105 தொகையாக வழங்குவதற்கு உடன்பட்டு 2017 டிசம்பர் 10 ஆந் திகதி உடன்படிக்கை ஏற்பட்டது. உடன்படிக்கையை மீறி ராகமை நகரம் முழுவதுமே சந்தை நடாத்தப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் மாதாந்த குத்தகை ரூபா | சந்தையை குறிப்பிட்ட எல்லைக்குள் நடத்தி குத்தகையைத் தீர்மானிக்க வேண்டும். | சந்தைக் காணியை மேலும் முறைப்படுத்த விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அறிக்கை பெறப்பட்டதும் ஒழுங்குபடுத்தப்படும். |

263,342 ஆகும். 2019 ஆம் ஆண்டின் மாதாந்த குத்தகையை ரூபா 183,286 வரை குறைத்து உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 ஒக்டோபர் 09 ஆந் திகதிய LGD/13/2016 ஆம் இலக்க சுற்றறிக்கைப்படி மாதாந்த வாடகை, திருத்தங்களுக்கு ஏற்ப செய்யப்படவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

#### (அ) நீதிமன்றத் தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மஹர மஜிஸ்ரேட் நீதிமன்றத்திலிருந்து 2012 தொடக்கமும் நீர்கொழும்பு மஜிஸ்ரேட் நீதிமன்றத்திலிருந்து 2016 தொடக்கமும் தண்டப்பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது. | நீதிமன்றத் தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். | மஹர நீதிமன்றத்திலிருந்து 2012 தொடக்கமும் நீர்கொழும்பு நீதிமன்றத்திலிருந்து 2016 தொடக்கமும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

#### (ஆ) முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கொழும்பு, கம்பஹா ஆகிய காணிப் பதிவாளர் அலுவலகங்களிலிருந்து 2015 தொடக்கம் பெற வேண்டிய முத்திரைக்கட்டணம் அறவிடப்படாதிருந்தது. | வருவாயைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொழும்பு, கம்பஹா, ஆகிய காணிப் பதிவாளர் அலுவலக முத்திரைக் கட்டண பட்டோலை மாகாண வருவாய் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான இலக்காகக் கொண்டு குறிப்பிடும் 2030 நிகழ்ச்சி நிரலை பிரதேச சபை அறிந்திருக்கவில்லை. இதனால் உலகளாவிய ரீதியில் பிரதேச சபை மக்களது வாழ்க்கைத் தரத்தையும் அசாதாரணத்தையும் உயர்த்துவதற்கான நெடுங்கால திட்டம் 2018 இல் தயாரிக்கப்படவில்லை. 2019 - 2023 வரையான கூட்டிணைந்த திட்டமே தயாரிக்கப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தொடக்கமும் இலக்கும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் திட்டம் தயாரிக்கப்படும். |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஒக்டோபர் 12 ஆந் திகதியளவிலும் 04 வேலைகள் மதிப்பீடு இல்லாது முடிவடைந்திருந்தன. மதிப்பீடு தயாரிக்கப்பட்ட ரூபா 2,799,000 பெறுமதியான 05 காணிகளுக்கு உடன்படிக்கை இருக்கவில்லை. | மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உடன்படிக்கை பெறப்பட வேண்டும். | இந்த 04 கணக்குகளுக்கான மதிப்பிடு 2018 ஒக்டோபர் 11 ஆந் திகதி தொழில் குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. வேலை ஆரம்பிப்பதற்கு முன்னர் உடன்படிக்கை செய்யப்படும். |
| (ஆ) | ராகமயில், ஹேலவத்த மாவத்தையில் 3 றூட், 17 பர்ச்சர்ஸ் காணியைத் | சபைக்குரிய காணி சட்டபூர்வமாகச் | இப்பாதையை உள்ளடக்கிய பிரதேச சபை வீதியை |

| | | | |
|---|---|---|---|
| | துண்டுகளாகப் பிரிப்பதற்குத் திட்டக் குழுவின் அங்கீகாரம் கிடைக்கவில்லை. மேலும், குறித்த 264 அடி தள 10 அடி அகல காணியில் பிரவேசிக்கக்கூடிய இடைப் பாதையில் கொங்கிறீட் இடப்பட்டு சுவீகரிக்கப்பட்டிருந்தது. | சுவீகரிக்கப்பட வேண்டும். | சுவீகரிப்பதற்கு எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (இ) | ஊழியர் கடன் மீதியாகிய 9 ஆண்டுகளைக் கடந்த ரூபா 299,120 அறவிடப்பாதிருந்தது. | அறவிடுவதற்கு முகாமைத்துவம் கவனம் மேற்கொள்ளப் பட வேண்டும். | கணக்கீட்டு மதியுரையாளர் அறிவுறுத்தலுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏகலவில் அமைந்துள்ள 29 ஏக்கர், 02 றூட் 12.81 பர்ச்சர்ஸ் சபைக்குரய OTS காணியின் எதிர்புறத்தே 2016 ஆம் ஆண்டில் முன்னால் உள்ள எல்லைக்குப் பயன்படுத்தப்பட்ட PVC வலையைத் தவிர, ஏனைய எல்லைகள் பாதுகாக்கப்படவில்லை. | சபைக்குரிய சொத்துக்களின் உரித்து உறுதி செய்யப்பட வேண்டும். | காணியின் நிரந்தர எல்லையை இனங்கண்டு முற்றாக எல்லை பாதுகாக்கப்படும் என்பதைத் தயவாக அறிவிக்கின்றோம். |

### 3.4 சபைக்கெதிரான வழக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஜாஎல பிரதேச சபை கந்தானை பாத்திமா மாவத்தையைப் பழுதுபார்க்கையில் டெலிகொம் நிறுவனத்திற்கு நிலத்தடி சமிக்ஞை பாதிப்படைந்ததாகவும் ரூபா 56,285 இழப்பு ஏற்பட்டதாகவும் 1311/M இலக்க வழக்கு தொடரப்பட்டிருந்தது. நட்டஈடு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | ஏற்படக்கூடிய நட்டஈடு நிதிக்கூற்றுக்களில் தெரியப்படுத்தப்பட வேண்டும். | வழக்குக்கான சகல செலவினமும் 105 9(1) தலைப்பின் கீழ் உள்ள இழப்பீடு ஏற்படின் இதிலிருந்து வழங்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கந்தானை புகையிரத வீதி குடியிருப்பாளர் ஒருவர் கட்டிடத்தால் தனது வீட்டிற்கு ஏற்படும் இழப்பு தொடர்பாக சபை தலையிடாததால் வழக்குத் தொடர்ந்திருந்தும், பிரதிநிதி ஒருவர் சமூகமளிக்காததால் 2003 யூலை 31 அன்று ஒரு பக்க சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டபோதும், அதற்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பொறுப்பான உத்தியோகத்தர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ்வழக்கு தொடர்பான கோவை கிடையாது. தற்போது நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட அறிக்கையின் படி கோவை பேணப்படுகின்றது. தகவல்கள் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | டஹசகபொல பலநோக்குக் கட்டிட நிர்மாண வேலை தொடர்பாக நிதியேற்பாடு கிடையாது. இதனால் அத்திவாரமிடப்பட்டு வேலை இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தக் கம்பனி தனக்கு ஏற்பட்ட இழப்பு தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்திருந்தது. 2012, 2013 ஆம் ஆண்டுகளில் ரூபா 2,403,319 இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. கோவை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. தற்போது அத்திவாரம் அகற்றப்பட்டுள்ளது. | தொடர்புடைய தரப்பினர்களுக்கு எதிராக நட்டம் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | வழக்கின் கோவை கிடைப்பதில்லை. வழக்கறிஞர் மூலம் அறிக்கையின் முழுப் பிரதியும் பெறப்படும். |

**3.5 பொருட் கொள்வனவு**

**3.5.1 வழங்கலும் சேவைகளும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாதுகாப்புச் சேவைக்கு சிவில் பாதுகாப்புச் சேவையின் காவலாளிகளைப் பயன்படுத்த 2015 செப்டம்பர் 01 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்தானது. உடன்படிக்கை நிபந்தனை 8க்கமைய 24 மணி நேர சேவைக்கு 06 காவலாளிகளும் 06 சுற்றுக்களில் பயன்படுத்தப்பட | உடன்படிக்கைப் பிரகாரம் நடக்க வேண்டும். | பாதுகாப்பு காவலாளிகள் 06 பேருக்கு 05 சுற்றுக் கடமை வழங்கப்பட்டுள்ளது. |

வேண்டும். 2018 யூலை வரவு இடாப்பின் பிரகாரம் 03 நாட்களை விட ஏனைய நாட்களில் உடன்படிக்கைப் படி நடக்கவில்லை.